சிசி 134/2019 பெயர் –ஜனகர்

அ.சா.1 நாள்–29.07.2025

**<u>சாட்சி மனுவில் பேரில் ஆஜர்படுத்தப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன் பேரில் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் இதற்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பட்டியல் சாட்சி 2 சசிக்குமார் எனக்கு மாமா உறவுமுறை. பட்டியல் சாட்சி 3 விஜயகுமார் என் சித்தப்பா மகன் ஆவார். பட்டியல் சாட்சி 5 சௌந்தரராஜன் என் தம்பி. பட்டியல் சாட்சி 6 ஆறுமுகம் எனது சித்தப்பா. நான் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, மேல்சிகிச்சைக்காக அன்றைய தினமே நான் தஞ்சாவூர் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். தஞ்சாவூரில் மூன்று நாட்கள் சிகிச்சை முடித்துவிட்டு, மறுபடியும் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். தஞ்சாவூரில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்களை நான் போலீசாரிடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்தள்ளேன். போலீசார் என்னை சம்பவம் நடந்து 4 வது நாள் வந்து ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையிலிருந்து தஞ்சாவூருக்கு நானாகத்தான் சென்றேன் என்றும், மருத்துவர்கள் பரிந்துரையில் செல்லவில்லை என்றால் சரியல்ல.எதிரிகள் யார் யார் என்னை திட்டினார்கள் என்று குறிப்பிட்டுத்தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் மூன்றுபேர்தான் கட்டையால்அடித்தார்கள். மூன்று பேரில் யார் என்னை கட்டையால் அடித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி கிருஷ்ணமூர்த்தி என்னைஅசிங்கமாகத் திட்டி, கட்டையை எடுத்து என்னை அடிக்க வந்தார் நான் அதை தடுத்துவிட்டேன் என்று முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை, நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.அப்போது எனக்கு கையில் அடிபடவில்லை. தர்மலிங்கம் கட்டையால் என்னை அடிக்க வந்து, பொது இடத்தில் வைத்து, உயிரோடு இருக்க கூடாது என்று திட்டியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவ சமயத்தில், சுடுகாட்டில் பிரச்சனை நடந்தபோது, சுமார் 100 பேர் இருந்திருப்பார்கள். சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனை வரும்போது எனக்கு மயக்கமாக இருந்ததால், யார் என்னை மருத்துவமனைக்க அழைத்துச் சென்றார்கள் என்று எனக்கு நினைவில்லை. என்னை

தர்மலிங்கம் கட்டையால்அடித்ததும், எனக்கு மயக்கம் வந்துவிட்டது. நான் சுயநினைவில் இல்லை. எனக்கு மருத்துவமனையில் தையல் போடும்வரை சுயநினைவு இல்லை. தையல் போட்ட பிறகுதான் மருத்துவர் என்னை விசாரித்தார். என்னை தர்மலிங்கம்தான் கட்டையால்அடித்தார் என்றால் சரிதான். சம்பவத்தில் அவர்மட்டும்தான் கட்டையால் அடித்தார். அதைதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். சம்பவத்தன்று யார் இறந்து அடக்கம் செய்யப்பட்டது என்றால் எனது பெரியம்மா அம்புஜம். அம்புஜம் இறந்தது தொடர்பாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அம்புஜத்திற்கு மகன்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். நாங்கள்தான் அடக்கம் செய்தோம். அம்புஜத்தின் பேரனை மொட்டையடித்து அவர்தான் கொள்ளி வைக்க வேண்டும் என்று அழைத்து வந்தார்கள். ஆனால் அவர் கொள்ளிவைக்கவில்லை, அதற்குள் அடக்கம் செய்துவிட்டோம். நான் சொல்வதுபோல் எதிரிகள் என்னை திட்டவோ, அடிக்கவோ இல்லை என்றும், அம்புஜத்தின் பேரனை கொள்ளிவைக்கவிடாமல், நாங்கள்தான் உறவினர் கொள்ளி வைப்போம் என்று பிரச்சனை செய்துவிட்டு, குடிபோதையில் கீழே தவறி விழுந்த காயத்தை பயன்படுத்தி, எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து, அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

உண்மை நகல்/

ஓம்/–S.தனலெட்சுமி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 (மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.